# பாடம் 7: வீழ்ச்சியும் பாவமும்

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 9 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 13 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 16 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், கடவுள் தமது படைப்போடு அவர் பகிர விரும்பியத் தமது பேரன்பின் காரணத்தால் காணப்படும் மற்றும் காணப்படாத உலகங்களைப் படைத்தார் என்பதை நாம் கற்றோம். அவருக்கு எதிராக வானதூதர்கள் கிளர்ச்சி செய்ததையும், இந்த வீழ்ச்சியுற்ற வானதூதர்கள் காணப்படும் உலகில் தங்களது தாக்கத்தை ஏற்படுத்தி கடவுளுக்கு எதிராக கிளர்ந்தெழ மனிதர்களைச் சோதிக்கின்றனர் என்பதையும் நாம் கண்டறிந்தோம், இந்த பாடத்தில், அவர்கள் எப்படி மனிதர்களை வீழ்ச்சியுறச் செய்தனர், மேலும் இந்த வீழ்ச்சியால் படைப்பின் மீது ஏற்பட்ட பின்விளைவுகள் என்ன என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. கடவுள் முதலில் மனிதர்களைப் படைத்த பொழுது, நமது முதல் பெற்றோர் கடவுளின் இறை வாழ்வில் பங்கு பெற்றிருந்தனர். அங்கு எந்த துன்பமோ, இறப்போ, பாவமோ, அல்லது தன்னலமோ இல்லை. ஆதாமும் ஏவாளும் கடவுளோடும், ஒருவர் மற்றவரோடும், படைப்பு அனைத்தோடும் நல்லிணக்கம் கொண்டிருந்தனர். ஆதாம், ஏவாளின் உடலும் ஆன்மாவும் கூட நிறைவான நல்லிணக்கத்தில் இருந்தன. அவர்கள் நிறைவான மனிதர்களாக இருந்தனர்.

2. தொடக்க நூல் 3:1-24 பகுதியை வாசித்து மாணவர்களுக்கு விளக்கவும்.

3. பாவம் எப்படி உலகில் நுழைந்தது என்பதை இந்த பகுதி நமக்கு காட்டுகிறது. நமது வாழ்வில் பாவம் எப்படி நுழைந்தது எப்பதையும் இது காட்டுகிறது. ஆதாமும் ஏவாளும், அது தவறு என்று அவர்கள் அறிந்திருந்தும் கடவுளின் கட்டளைக்கு எதிராகச் செல்வதைத் தேர்வு செய்கின்றனர். அவர்கள் தங்களை கடவுளுக்கு மேலாக வைத்தனர், அவ்வாறு செய்ததில், அவர்கள் தங்கள் மீது தீங்கைக் கொணர்ந்தனர். சாத்தானால் (அல்லது அலகையால்) சோதிக்கப்பட்டு, மனிதர்கள் கடவுளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து அவருடனான நமது உறவுநிலையை முறித்தனர். கடவுளிடம் இருந்து நமது சார்பின்மையை உறுதி செய்வதே கிளர்ச்சியின் நோக்கம். தங்கள் படைப்பாளரான கடவுளில் நம்பிக்கை கொள்ளத் தவறிய மனிதர்கள், கடவுளால் தரப்பட்ட சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தினர்.

4. இந்த வீழ்ச்சிக்கான குற்றவாளி அலகையே (கதிம 391, 392 வாசிக்கவும்):

கதிம 391: "நமது முதல் பெற்றோரின் கீழ்ப்படியாமை தெரிவுக்கு பின்னே, கடவுளுக்கு எதிரான ஒரு ஏமாற்றும் குரல் பதுங்கியுள்ளது, அது பொறாமையினால் அவர்களை இறப்புக்கு வீழ்ச்சியுறச் செய்தது. மறைநூலும் திருச்சபையின் மரபும் இதில் 'சாத்தான்' அல்லது 'அலகை' என்று அழைக்கப்படும் வீழ்ச்சியுற்ற வானதூதரைக் காண்கிறது. சாத்தான் முதலில் கடவுளால் உருவாக்கப்பட்ட ஒரு நல்ல வானதூதராக இருந்தான் என்று திருச்சபை கற்பிக்கிறது: 'அலகையும் மற்றப் பேய்களும் உண்மையில் இயல்பிலே நல்லவர்களாக கடவுளால் படைக்கப்பட்டனர், ஆனால் அவர்கள் தங்கள் சொந்த செயலால் தீயோர் ஆயினர்.'"

கதிம 392: "இந்த வானதூதர்களின் பாவத்தைக் குறித்து மறைநூல் பேசுகிறது. இந்த படைக்கப்பட்ட ஆவிகளின் சுதந்திர தெரிவில், தீவிரமாகவும் திரும்பப்பெற முடியாதவாறும் கடவுளையும் அவரது ஆட்சியையும் நிராகரித்ததில் இந்த 'வீழ்ச்சி' அடங்கியுள்ளது. நமது முதல் பெற்றோரைச் சோதித்தவனின் வார்த்தைகளில் இந்தக் கிளர்ச்சியின் பிரதிபலிப்பை நாம் கண்டறிகிறோம்: 'நீங்கள் கடவுளைப் போல் ஆவீர்கள்.' இந்த அலகை 'தொடக்கத்தில் இருந்தே பாவம் செய்கிறான்'; அவன் 'ஒரு பொய்யனாகவும் பொய்களின் தந்தையாகவும்' இருக்கிறான்.

5. ஆதாமையும் ஏவாளையும் அலகை எப்படி சோதித்தான் என்று கவனியுங்கள். அவன் கடவுளின் கட்டளையை தெளிவற்றதாக ஆக்குகிறான்: ‘‘கடவுள் மெய்யாகவே சொன்னாரா…?’’ பிறகு அவன் கடவுளின் நோக்கங்களை அவர்கள் சந்தேகப்படச் செய்கிறான் (வசனம் 5). ஒரு நச்சு உரையாடல் வழியாக, அவன் ஏவாளைப் பாவம் செய்ய சம்மதிக்க வைக்கிறான், அதை பகுத்தறிவுக்கு ஏற்றதாக்க, அவளது மனதில் அனைத்தையும் சரியாக்கி ஒரு வழியைக் கண்டறியச் செய்கிறான் (வசனம் 6). தனது மனைவியை நடத்துவதில் ஆதாம் தவறியதையும் அலகை மறைமுகமாகக் காட்டுகிறது, ஏனெனில் முழு நேரமும் ஆதாம் அங்கு நின்று கொண்டிருந்தான் (வசனம் 6).

6. மனிதர்கள் தமக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பொழுது கடவுள் வருத்தமுற்றார், ஆனால் அவர் கோபத்தினால் பதிலிறுக்கவில்லை. இந்த வீழ்ச்சி கடவுள் ஏற்கெனவே மனிதர்களை அன்பு செய்ததை விட எதையும் குறைக்கவில்லை. உண்மையில், இந்த வீழ்ச்சி நிகழும் என்பதை ஏற்கெனவே தொடக்கத்தில் இருந்தே (ஆதாமையும் ஏவாளையும் படைத்த பொழுதே) அவர் அறிந்திருந்தார், மேலும் மனிதர்களை மீட்க ஏற்கெனவே அவர் நிறைவான திட்டத்தைக் கொண்டிருந்தார்.

7. கடவுள் அந்த உதவி வந்து கொண்டிருந்ததை வாக்களித்தார். எதிர்காலத்தில் வருகின்ற ஒரு பெண் அலகையை வீழ்த்தும் கருவியாக இருப்பார். ‘‘நான் உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் எதிராகப் பகையை உண்டாக்குவேன்; அது உன் தலையை நசுக்கும், நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்’’ (வசனம் 15).

8. கடவுள் அவர்களின் ஆடையின்மையை மூடினார். வீழ்ச்சியால், ஆதாமும் ஏவாளும் தங்கள் ஆடையின்மை குறித்து புதிய விதத்தில் அறிந்தனர், அது அவர்களுக்கு வெட்க உணர்வைக் கொணர்ந்தது. அவர்கள் உண்மையில் கடவுளோடு அனுபவித்த நெருக்கத்தை வெட்கமும் அந்நியப்படுதலும் இடம் மாற்றின. ‘‘மனிதன் மற்றும் அவனது மனைவிக்காக கடவுள் தோல்களால் ஆடைகளை உருவாக்கி, அவர்களை உடுத்தினார்’’ (வசனம் 21).

9. கடவுள் அவர்களின் பழக்கங்களை மாற்றினார். மனிதகுலம் தங்கள் வீழ்ச்சியில் இருந்து மீட்கப்படுவதற்கான தங்களின் தேவையைக் குறித்து நிலையாக விழிப்புணர்வுடன் இருக்க, அவர்களின் வாழும் சூழ்நிலையில் இடர்பாட்டை உருவாக்க கடவுள் படைப்பை சபித்தார். இதனால் மனிதகுலம் இழந்துபோன நிறைவினை மீட்டுருவாக்கம் செய்ய ஏங்கும். ‘‘மனிதனிடம் அவர் கூறினார், ‘நீ உன் மனைவியின் பேச்சைக் கேட்டு, நீ உண்பதற்கு நான் தடை செய்திருந்த மரத்தில் இருந்து உண்டதால், உன் பொருட்டு மண் சபிக்கப்படட்டும்! நீ வாழும் வரை அதிலிருந்து நீ வேதனையோடு உனது உணவைப் பெறுவாய்’’’ (வசனம் 17).

10. முதல் பெற்றோரை படைத்த பொழுது, ஆதாம் மற்றும் ஏவாளுக்கு கடவுள் மூன்று நிலைகளின் கொடைகளை வழங்கினார்:

அ) அவர் அவர்களுக்கு மனம் மற்றும் விருப்பத்தோடு, உடலும் ஆன்மாவும் உள்ளடக்கிய **அடிப்படை மனிதத்தன்மையை** வழங்கினார். ஒவ்வொன்றும் அதனுள் குறிப்பிட்ட இயல்பான தெரிவுகளையும் தேவைகளையும் கொண்டுள்ளது. இவற்றில் எதுவும் தன்னிலே தீமையானது இல்லை, ஆனால் அவற்றை ஒருங்கிணைக்கும் சில கூடுதல் கொடைகளின் உதவியின்றி, அவை ஒழுங்கின்மைக்கும், கிளர்ச்சிக்கும் செல்லும்.

ஆ) கடவுள் நமது முதல் பெற்றோருக்கு ஒரு கூடுதல் கொடையை வழங்கினார், நீதி என்ற அது ஒரு ஒருங்கிணைக்கும் கொடை. இந்த ஒருங்கிணைக்கும் கொடை ஒவ்வொரு இயல்பான தெரிவையும் அதன் இடத்தில் வைக்கும் சாத்தியத்தை உருவாக்குகிறது (சில நேரங்களில் **நேர்மையின் கொடை** என அழைக்கப்படுகிறது). ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பொழுது, கீழுள்ளத் சதை கிளர்ந்தெழுவதற்காக வரம்புக்கு வெளியே செல்லத் தொடங்கியது. ஆகவே, ஆதாம் மூடுதலின் தேவையை உணர்ந்தான்; வீழ்ச்சிக்கு முன், அந்த சதை எளிதில் கட்டுப்படுவதாக இருந்ததால், அவன் அதை உணரவில்லை. கடவுள் அவர்களுக்கு உடல்சார் இறப்பில் இருந்தும் விலக்கு அளித்திருந்தார், மற்ற விதத்தில் இயல்பாக உடலும் ஆன்மாவும் இணைந்த பகுதிகளாக இருக்கும், ஆன்மா வெளியேற முடியும், அதனால் இறப்பு நிகழ்கிறது.

இ) அவர் அவர்களுக்கு **அருள் வாழ்வை**, தமது வாழ்வின் ஒரு பங்கை வழங்கினார், அது வரவிருக்கும் வாழ்வில் கடவுளின் காட்சிக்கு அடிப்படையில் தகுதியுள்ளதாக ஆன்மாவை உருவாக்குகிறது.

11. ஆதாமும் ஏவாளும் மேற்கண்ட எல்லா கொடைகளையும் தங்கள் வழித்தோன்றல்களுக்கு கடத்த வேண்டும் என்று கடவுள் தெளிவான நோக்கம் கொண்டிருந்தார். எனினும், தொடக்க நூல் 3ஆம் அதிகாரத்தின் நிகழ்வுரை வழியாக, அவர்கள் (தடுக்கப்பட்ட கனியை உண்பதில் இருந்து விலகியிருக்குமாறு தரப்பட்ட கட்டளை காட்டுகின்ற) அவரது உச்ச அதிகாரத்துக்கு கீழ்ப்படிய மறுத்து அவரது கட்டளைகளை மீறினார்கள் என்று மறைநூல் நமக்கு சொல்கிறது. அவர்களின் கிளர்ச்சியில், புனிதப்படுத்தும் அருளையும் ஒருங்கிணைக்கும் கொடையையும் அவர்கள் இழந்தனர். ஆகவே, அவர்கள் தங்களது வழித்தோன்றல்களுக்கு, மற்ற கொடைகள் இன்றி அடிப்படை மனிதத்தன்மையை மட்டுமே கடத்தினர். இந்த நிலையே தொடக்கப் பாவம் என அழைக்கப்படுகிறது.

12. கடவுள் நம்மை அவருடன் என்றுமுள்ள நட்புறவில் வாழ்வதற்காகப் படைத்திருந்தாலும், ஆதாம், ஏவாளின் வழித்தோன்றல்கள் கடவுளோடு நட்புறவு அற்ற ஓர் இயல்பான நிலையில் பிறக்கின்றனர். உண்மையில், முதல் பெற்றோரின் வீழ்ச்சியால், மனிதர்கள் சாத்தானின் அதிகாரத்துக்கு அடிமைகள் ஆயினர். இந்த உலகிற்கு கொணரப்படும் ஒவ்வொரு மனிதரும் சாத்தானின் தாக்கத்தால் பாதிக்கப்படுகிறவராகவும், தாமாகவே கடவுளின் நண்பராக இல்லாதவராகவும் இருக்கிறார் என்பதும் இதற்கு பொருளாகும்.

13. தொடக்கப் பாவத்தின் விளைவாக மனிதரின் மனதில் இருளும், விருப்பில் வலுவின்மையும் வந்தன. எனினும், மனிதகுலம் முழுமையாக கடவுளையும் அவரது விருப்பத்தையும் அறியும் இயலுமையை இழந்துவிட்டது என்பது இதற்கு பொருளன்று. தொடக்கப் பாவம் முழுமையாக அன்றி ஆழ்ந்தக் குறைபாட்டை ஏற்படுத்தியது. சிறப்பு இறை அருள் இன்றியும், கடவுளை அறிவதற்கும் அவரைத் தேடுவதற்குமானத் திறனை மனிதர்கள் இன்னும் கொண்டுள்ளனர் என்பதே இதன் பொருள். தொடக்கப் பாவம் மனிதரின் சுதந்திர விருப்பத்தில் இழப்பை ஏற்படுத்தவில்லை; ஆகவே, ஒரு நபர் தமது சுதந்திர விருப்பத்தை நிறைவற்ற விதத்தில் பயன்படுத்தினாலும் கடவுளின் அன்புக்கு பதிலிறுக்க முடியும்.

14. தொடக்கப் பாவம் பற்றிய கத்தோலிக்கத் திருச்சபையின் படிப்பினை குறித்து கவலை கொண்டுள்ள மக்கள் இருக்கின்றனர். புதிதாகப் பிறந்த எந்தக் குழந்தையும் ஏற்கெனவே, எதையும் பேசவோ, செய்யவோ கற்பதற்கு முன்பே பாவத்தில் இருக்கின்றனர் என்று அவர்கள் தவறாகப் புரிந்து கொள்கின்றனர்! இந்த புரிதல் சரியானதன்று. ஒரு குழந்தை தானாகவே தனது நிலைக்கு சொந்தப் பொறுப்பாகிறது என்பது தொடக்கப் பாவத்தின் பொருளன்று. இயல்பாக, அக்குழந்தை கடவுளின் மீட்கும் அருள் இல்லாமல் பிறந்திருக்கிறது என்பதே அதன் எளிதானப் பொருள். தொடக்கப் பாவம் என்பது செய்யப்பட்ட பாவம் அன்று, மாறாக பெறப்பட்ட பாவம்; இது தனிப்பட்ட பாவத்தில் இருந்து வேறுபட்டது.

15. மனிதகுலத்தின் ஒரு தலைமுறையில் இருந்து மற்றதற்கு, இது வெளிப்படையாக அதிகரிக்கிறது, அதாவது கடவுளிடம் இருந்து அதிகமதிகமாக மனிதர் தனது சார்பின்மையை உறுதிப்படுத்துகிறார். நாம் அடிக்கடி நமது வாழ்வில் கடவுளின் பிரபுத்துவத்துக்கு நமது வாழ்வில் அடிபணிய மறுக்கிறோம். எது சரி தவறு, நல்லது கெட்டது என்பதை தீர்மானிக்க நமது சொந்த அதிகாரத்தைப் பயன்படுத்தவே நாம் முன்னுரிமை அளிக்கிறோம்.

16. மனிதர்களின் கிளர்ச்சி பல கொடிய பின்விளைவுகளை உலகிற்கு கொணர்ந்துள்ளது, மேலும் அதன் விளைவுகள் உலகளாவிய அளவில் உணரப்படுகின்றன. பின்வருபவை சில எடுத்துக்காட்டுகள்:

அ) *தீவிர நாத்திகம்* (அல்லது அலகை வழிபாடு): கடவுளின் இருத்தலை நம்ப மறுக்கின்ற மக்கள், மற்றும் கடவுளுக்கு பதிலாக அலகையை வழிபடுவதை விருப்பத்துடன் தெரிவு செய்வோர்.

ஆ) *பாலினக் குழப்பம்*: தங்கள் பாலினம் பற்றி மக்கள் குழப்பமுறுவது இன்று அதிகரிக்கும் நிகழ்வாக இருக்கிறது, அவர்கள் கடவுள் தங்களைப் படைத்த பாலினத்தில் இருந்து வேறொன்றாக இருப்பதாகத் தங்களை அடையாளம் காண்கின்றனர்.

இ) *நீதியற்றப் பொருளாதாரம்*: பாவம் மனிதர்களை பேராசை கொண்டோராகவும், மேலும் ஒருவர் மற்றவரின் தேவைகளில் அக்கறை இல்லாதோராகவும் ஆக்கியுள்ளது. செல்வந்தர்கள் பலரும் ஏழைகள் மீது குறைந்த அக்கறையோடு அல்லது அக்கறையின்றி இருக்கின்றனர்.

ஈ) *அரசியல் அடக்குமுறை*: மனிதர்கள், தங்களது பாவ இயல்பில், ஒருவர் மற்றவருக்கு எதிராகச் சுரண்டலிலும் வேறுபடுத்தலிலும் ஈடுபடுகின்றனர். சிறப்பாக அரசியல் அதிகாரம் கொண்டோரிடம் இது உண்மையாக இருக்கிறது.

உ) *"இயற்கை" பேரழிவுகள்*: இயற்கையாகத் தெரிகின்றப் பேரழிவுகள் அடிக்கடி படைப்பு மற்றும் இயற்கையை மனிதர்கள் சுரண்டுவதன் விளைவாக இருக்கின்றன.